O.S. No: 55/2022

பெயர் : முருகேசன்

**வா.சா. 3**

05-02-2025

**1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் பேட்டை வடக்கு கீழ தெருவில் குடியிருக்கிறேன் . நான் வசிக்கும் பகுதியின் கவுன்சிலர் மாரியப்பன் நீதிமன்றத்திற்கு வந்திருக்கிறார். நீதிமன்றத்தில் ஏற்கனவே என்னை விசாரித்த அன்றும் அவர் வந்திருந்தார் என்றால் ஆமாம் . நீதிமன்றத்தில் அழைப்பாணையில் என்ன சொல்லப்பட்டுள்ளது என்றால் வீடு வேலை பார்த்தது சம்மந்தமாக சொல்லப்பட்டுள்ளது . அந்த வீட்டு கதவு எண் தெரியாது. யாருடைய வீட்டை கட்டி கொடுத்தது சம்மந்தமாக சாட்சி சொல்ல அழைத்தார்கள் என்றால் சண்முகம் வீடு சம்மந்தமாக அழைத்தார்கள் . எனக்கு வந்த அழைப்பாணை உள்ளது. அழைப்பாணையில் சண்முகம் வீட்டு நம்பரோ , சண்முகம் வீடு சம்மந்தமாக சொல்ல வேண்டும் என்றோ சொல்லப்படவில்லை என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்து பேட்டை வடக்கு தெருவில் உள்ளது . பேட்டை மேல வடக்கு தெருவில் நான் சண்முகம் வீடு , அதற்கு எதிர்த்தாற் போல் உள்ள வீடு, வடக்கு பக்கம் 10 வீடு தள்ளி கட்டி கொடுத்துள்ளேன். எதிர்த்தாற் போல் வெங்கடேசன் வீடு, 26 க்கு 40, 25 வருடங்களுக்கு முன்பு கட்டி கொடுத்தேன் . அதில் அவர் சித்தப்பா தான் இருக்கிறார் . 10 வீடு தள்ளி கட்டியது ஒரு டீச்சர் வீடு . அது கட்டி 25, 27 வருடம் இருக்கும். அந்த வீடுகளில் கும்பகோணம் நகராட்சியால் அங்கிகாரம் பெறப்படவில்லை. நானாக தான் கட்டினேன். நான் 12 வயதில் சித்தாளாக எனது வேலையை ஆரம்பித்தேன் . நான் 22 வயதில் மேஸ்திரியாகிவிட்டேன். சண்முகத்தின் வீடு நகராட்சியில் அனுமதி பெற்று கட்டப்பட்டதா என்றால் இல்லை. சண்முகம் வீடு கிழக்கு பார்த்த வீடு, வடக்கு புறம் சமையல் அறை, தெற்கு புறம் ரூம். வட கிழக்கில் கிச்சனும், வட மேற்கில் கக்கூசும் உள்ளது. கீழ்தளம் கட்டி 5 வருடம் கழித்து முதல் தளம் கட்டப்பட்டது . முதல் தளத்திற்கும் நகராட்சி அனுமதி கிடையாது . முதல் தளம் கிழக்கு பார்த்த வாசல் . கிழக்கு மேற்கு 30, மேற்கு பக்கம் திறந்தவெளியாக விட்டு கீழண்டபக்கம் 12 அடி கட்டியுள்ளேன். தெற்கு வடக்கில் முதல் தளத்தில் 30 அடி, கிழக்கு மேற்கில் 12 அடி. நான் முதல் தளம் கட்டுவதற்கு முன்பு மாடி படி வழியாக போனால் மொட்ட மாடிக்கு தான் போகவேண்டும் என்றால் ஆமாம் . படி முதலில் கிழக்கு பக்கம் கீழ் தளத்தில் வடக்கு பக்கம் ஏறுமாறு கட்டி மேற்கு பக்கம் திரும்பி மீண்டும் தெற்கு பக்கம்

திரும்பும் மாறு படி கட்டியுள்ளேன் . அந்த படி கட்டி 5 வருடம் கழித்து தான் முதல் தளம் கட்டினேன் என்றால் ஆமாம் . முதல் தளத்தில் இருந்து வடக்கு சுவற்றை ஒட்டி மொட்டைமாடிக்கு போகுமாறு ஒரு படி கட்டியுள்ளேன் என்றால் ஆமாம் . மொட்டை மாடிக்கு போகும் படி மேற்கு பார்த்து ஏறுவது என்றால் ஆமாம் . வடபுறம் மாடி படிக்கு வடக்கே திறப்பாக உள்ளதா என்றால் கொல்லை தான் உள்ளது . நான் கட்டியதாக சொல்லும் முதல் தளத்தின் கிழக்கு பார்த்த வீடு வா .சா.ஆ. 10 புகைப்படத்தில் முதல் புகைபடமாக உள்ளது . அது வா.சா.ஆ.10 இல் உள்ள முதல் புகைப்படம் **வா.சா.ஆ. 16 ஆகும்.** இந்த மாடிபடி முடியும் தளத்தின் வடபுற சுவற்றிற்கு வடக்கே மாடிபடியை அடுத்து 5 முதல் 6 அடி திறப்பாக உள்ளது என்றால் ஆமாம் . நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்த பிறகு நான் சண்முகம் வீட்டை நான் போய் பார்த்தேனா என்றால் இல்லை . 22 வருடங்களுக்கு முன்பு நான் கட்டிய கட்டிடத்தை நான் ஞாபகத்தில் தான் சொல்கிறேனா என்றால் நான் நடுவில் போய் சில்லறை வேலை பார்ப்பேன் . கீழ் தளத்தில் வட மேற்கில் அமைந்துள்ள கழிவறை தண்ணீர் மேற்குபுறம் உள்ள சுவற்றை ஒட்டி வடபுறம் செல்கிறது என்றால் ஆமாம் . முதல் தளத்தில் உள்ள கழிவறை தண்ணீரும் மேல்புறம் உள்ள பைப்பில் இணைந்து தான் செல்கிறது என்றால் ஆமாம் . செப்டிங்டேங் கொல்லை கடைசியில் வடமேற்கே கட்டியுள்ளேன் . முன்பகுதியில் குடியிருப்பவர்களின் கழிவறை தண்ணீரும் இதே பைப்பில் தான் சேர்ந்து செல்கிறது . பொதுபாதையில் எந்த பைப்பும் போகவில்லை என்றால் வாட்டர் லைன் பைப் போகிறது . அந்த வாட்டர் பைப் கீழண்ட பக்கம் தான் உள்ளது . வழக்கு யார் யார் மீது போட்டார்கள் என்று நான் தெரிந்துக்கொண்டேனா என்றால் அண்ணன் பையன் வீட்டை இடிக்கபோகிறார் என்று சண்முகம் சொன்னதை வைத்து தெரிந்துக்கொண்டேன் . கீழ்தளத்தில் கட்டப்பட்டுள்ள மாடி படிகளை சண்முகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் உள்ளதை தவிர மீதம் உள்ளதை அப்புறப்படுத்த முடியும் என்றால் முடியாது. மாடி படிகளுக்கு பில்லர் உள்ளதா என்றால் மாடி படிகளுக்கு காண்கிரிட் பில்லர் வைத்து கட்டப்படவில்லை . செங்கல் வைத்து பில்லர் எழுப்பப்பட்டுள்ளது என்றால் சரியல்ல . தற்போது ஒரு முழு கட்டிடத்தையே சற்றுதள்ளி வைக்கும் அளவிற்கு விஞ்ஞானம் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்றால் சரி . பெரிய பெரிய கட்டிடத்திற்கே மாடிப்படியை அப்புறப்படுத்தவும் மாற்றி அமைக்கவும் வசதி உள்ளது என்றால் சரி. அவ்வாறு சண்முகம் இடத்தில் உள்ளது போக மீதம் உள்ளவற்றை அறுத்து எடுத்து அப்புறப்படுத்த முடியும் என்றால் சரியல்ல . நான் சண்முகத்திற்கு வீடு கட்டி கொடுத்ததாக சாட்சியமளித்துள்ளது உண்மைக்கு புறம்பானது என்றால்

சரியல்ல. நான் சம்மனை பெற்றுக்கொண்டு சண்மகம் தெரிவித்தவாறு பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**3 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் முதல் விசாரணை சாட்சியத்தில் வாதி பிரதிவாதிகளை தெரியும் என்று சொல்லியிருக்கிறேன் என்றால் ஆமாம். வாதி, எத்தனை பேர் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் அவர் அண்ணன் , தம்பி மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார் . இந்த வழக்கில் 3 ஆம் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ள ருக்மணி பற்றி எனக்கு எதுவும் தெரியாது. வாதிக்கு கட்டிடம் கட்டுவது சம்மந்தமாக நான் ஒப்பந்தம் எதுவும் போடவில்லை. நான் கட்டிட பொறியாளரின் கீழ் மேஸ்திரியாக வேலை பார்த்திருக்கிறேன். வாதிக்கு இந்த கட்டிடம் நான் கட்டி கொடுத்தது தான் . பொறியாளரின் கீழ் வேலை பார்க்கவில்லை . நான் பொறியாளர் வசீகரன் என்பவருக்கு கீழ் வேலை பார்த்திருக்கிறேன் . நான் வாதிக்கு வீடு கட்டி கொடுக்க வில்லை என்றாலும் வாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.